# இளைஞர்களுக்கென்றே பிரத்யேகமாக சிறுவயதிலேயே கஞ்சாவைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள்



இதுகுறித்து வினவியபோது, பெரும்பாலானோர் கஞ்சா குறைந்த அபாயம் கொண்டது என்று நம்புவதாகக் கூறினர்.

ஒவ்வொரு ஆண்டும் கனடியர்களில்

**25 %**

பேர் 15 வயது முதல் 24 வரை கஞ்சாவைப் பயன்படுத்துகின்றனர்

சில அபாயங்கள் கஞ்சா பயனர்களில் அனைத்து வயதினருக்குமான சில அபாயங்கள் உள்ளன, ஆனால் 25 வயதுக்குக் குறைவானோர்களுக்கான தனித்தன்மை வாய்ந்த அபாயங்கள் குறித்து வெகுசிலரே அறிந்துள்ளனர்

இளைஞர்கள் கஞ்சா பயன்படுத்துவதை முடிந்தவரை தாமதப்படுத்த முயல வேண்டும்.

ஏன் என்பதற்கான **5** காரணங்கள் இவையேயாகும்.

## 1 | மூளையில் ஏற்படும் விளைவுகள்

**25 வயது**வரையில் நமது மூளைகள் **முழுமையாக வளர்ச்சியடைவதில்லை.** சிறுவயதிலேயே தொடங்கி வழக்கமாக கஞ்சா புகைப்பது **முன்நெற்றிப் புறணி** என்றழைக்கப்படும் மூளையின் ஒரு பகுதியைப் பாதிக்கக்கூடும். இது நினைவாற்றல், முடிவெடுத்தல் மற்றும் பிரச்சனைகளைத் தீர்த்தல் போன்றவற்றில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். இந்தப் பாதிப்புகள் நிரந்தரமானவையா என்பது நமக்குத் தெரியாது மேலும் இதனால் பாதிப்படைபவர்கள் யார் என்பதையும் நம்மால் கணிக்க முடியாது.



## 2 | மோட்டார் வாகனப் பாதுகாப்பு



கஞ்சா பயன்படுத்துவது ஓட்டுநர்ளின் **எதிர்வினையாற்றும் நேரம், ஒருங்கிணைப்பு** மற்றும் **ஒருமித்த கவனம்** ஆகியவற்றைப் **பாதிப்பதன்**மூலம் மோட்டார் **வாகன விபத்துக்கள்** ஏற்படும் **அபாயத்தை அதிகரிக்கிறது.** கனடாவில், 15-19 வயதுக்கிடையிலான இளம் பருவத்தினர் **கஞ்சா பயன்படுத்திய பின்னர் வாகனம் ஓட்டுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன**

## 3 | மன நோய்களுடனான தொடர்புகள்

வழக்கமாக கஞ்சா பயன்பபடுத்துதல் **மனச்சிதைவு நோயுடன்** தொடர்புடையதாக உள்ளது, குறிப்பாக அறிவுப்பிறழ்ச்சி போன்ற ஒரு மனநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோர் அல்லது உடன்பிறப்பைக் கொண்டோருக்கு இதற்கான வாய்ப்பு அதிகம்.

மனச்சிதைவு நோயின் அறிகுறிகள்
-பதற்றம்
-பகையச்சம்
-மாயத்தோற்றங்கள்
-மாய உணர்வுகள்
-மனநிலை மாற்றங்கள்



கஞ்சா பயன்படுத்துவது **மனச்சோர்வு** மற்றும் **பதற்றம்** ஆகியவற்றுடனும் **தொடர்புடையதாக**இருக்கலாம், ஆனால் இது குறித்து அந்த அளவுக்குத் **தெளிவான தகவல் இல்லை.**

## 4 | கஞ்சா பயன்படுத்துவதற்கு அடிமையாவதற்கான சாத்தியம்

6 இல் 1 **இளம் பருவத்தில்** கஞ்சா பயன்படுத்தும் **நபர்கள் சிக்கலான பயன்பாடு, உடல்ரீதியாக மற்றவரை சார்ந்திருத்தல்** மற்றும்/அல்லது **கஞ்சா பயன்படுத்துவதை நிறுத்துவதால் ஏற்படும் அறிகுறிகள் போன்றவற்றை** அனுபவிப்பார்கள். இளைஞர்களில், **தினந்தோறும் கஞ்சா பயன்படுத்துவோர்** நிக்கோடின் அல்லது மது போன்றவற்றை விட **வேகமாக போதைப் பொருளுக்கு அடிமையாகும் நோய்க்கு**ஆளாகக்கூடும்



## 5 | நடத்தையில் ஏற்படும் விளைவுகள்




**16 வயதுக்கு முன்பு** கஞ்சா பயன்படுத்துவது, வாழ்வின் பிற்காலத்தில் **வேறு போதைப்பொருட்களைப்**பயன்படுத்துவதுடன் தொடர்புடையதாக உள்ளது
கஞ்சா பயன்படுத்துவது இளைஞர்களில்**உத்வேகத்தைக் குறைத்துவிடக்கூடும்**மேலும் இது **மோசமான தேர்ச்சி மற்றும் மோசமான பள்ளி வருகை** ஆகியவற்றுடன் தொடர்புடையது

Holland Bloorview
Kids Rehabilitation Hospital

This document was client & family reviewed

UNIVERSITY OF WATERLOO
FACULTY OF SCIENCE
School of Pharmacy

Anastasiya Shyshlova, PharmD பயிலுநர்,
Michael Beazely, BSP, PhD
mbeazely@uwaterloo.ca என்னும் மின்னஞ்சலுக்கு கோரிக்கை அனுப்புவதன் மூலம் குறிப்புகளைக் கிடைக்கப் பெறலாம்

KITCHENER WATERLOO COMMUNITY FOUNDATION

WaterlooRegion
Integrated Drugs Strategy